# சத்துருவின் பிடியிலிருந்து



**"பின்பு, அவர் பட்டணங்கள்தோறும் கிராமங்கள்தோறும் பிரயாணம்பண்ணி, தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்துவந்தார். பன்னிருவரும் அவருடனேகூட இருந்தார்கள். அவர் பொல்லாத ஆவிகளையும் வியாதிகளையும் நீக்கிக் குணமாக்கின சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும், ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துகொண்டுவந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள்." (லூக் 8:1-3)**. இங்கு மேற்கண்ட வசனத்தில் ஆண்டவரோடு நடந்த அப்போஸ்தலர்களாகிய சீஷர்களை தவிர, அவரோடு கூட மற்றவர்களும் இருந்தார்கள் என்பதை காணலாம். அதில் குறிப்பாக **"அவர் பொல்லாத ஆவிகளையும் வியாதிகளையும் நீக்கிக் குணமாக்கின சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும்," (லூக் 8:2)** என்பது மிகவும் ஆச்சரியமானதாகும். சில நாட்கள், அல்லது மாதங்கள், அல்லது வருடங்கள் முன்பு வரை பொல்லாத ஆவிகளால் அதிலும் குறிப்பாக ஏழு பிசாசுகளால் பீடிக்கப்பட்டு இருந்த மகதலேனா மரியாள் போன்ற ஸ்திரீகள், இன்று ஆண்டவரோடு இருப்பது எவ்வளவு அருமையானது. அவர்களுடைய முந்தைய நிலையை பார்த்த மற்றவர்கள், அந்த ஸ்திரிகள் இப்பொழுது சமாதானத்தோடு ஆண்டவரின் வார்த்தைகளை ஒவ்வொரு நாளும் கேட்டு அவரோடு நடப்பதை காணும் பொழுது நிச்சயமாகவே ஒரு மிகப்பெரிய மாற்றத்தை அவர்களில் கண்டிருப்பர்.

குறிப்பாக ஏழு பிசாசுகளால் பிடிக்கப்பட்டு இருந்த மகதலேனா மரியாளே உயிர்த்தெழுந்த ஆண்டவரை முதன்முதலாக கண்டாள். ஆண்டவர் அவளை தேடி வந்து ஏன் அழுகிறாய் என்று கேட்டு அவளுக்கு தம்மை வெளிப்படுத்தினார் **(யோ 20:11-17)**. இது எவ்வளவு பெரிய பாக்கியம். ஆரம்பத்தில் சத்துருவின் பிடியில் எப்படியோ இருந்த வாழ்க்கை, இப்பொழுது ஆண்டவரே தேடி வரும் அளவிற்கு மாறி போனதே. மகதலேனா மரியாள் போன்று எத்தனையோ நபர்களின் வாழ்க்கையில் ஆண்டவர் விடுதலையை தந்து அவர்கள் வாழ்க்கையை தலைகீழாக மாற்றினார். சத்துருவின் பிடியில் அவனுடையவர்களாய் இருந்த அவர்கள் இன்று தேவனுடைய ராஜ்யத்திற்கு

உரியவர்களாய் மாறிப்போனார்கள். இவர்கள் மாத்திரம் அல்ல, சிலுவையில் இருந்த கள்ளன், விபச்சாரத்தில் பிடிக்கப்பட்ட ஸ்திரீ, ஆயக்கரனாகிய சகேயு என்று இன்னும் எத்தனையோ நபர்களை ஆண்டவர் பாவப்பிடியிலிருந்தும், நோயிலிருந்தும், பிசாசின் பிடியிலிருந்தும் தமது வல்லமையினால் தப்புவித்தார். அவர்கள் ஆரம்பம் அற்பமாக இருந்தாலும் அவர்களுடைய முடிவு சம்பூரணமாய் இருந்தது.

ஆனால் அதே நேரத்தில் யூதாஸ் காரியோத்து, போன்ற மனிதர்கள் ஆண்டவரோடு தங்கள் வாழ்க்கையை அருமையாய் தொடங்கி நடத்தினாலும் இடையில் ஏதோ ஒரு சிறு காரியத்தில் பிசாசிற்கு இடம் கொடுத்து அதனால் மிகவும் மோசமான முடிவை பெற்றனர். **"அப்பொழுது பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவரைக் கொலைசெய்யும்படி யோசித்து, ஜனங்களுக்குப் பயப்பட்டபடியினால், எவ்விதமாய் அப்படிச் செய்யலாமென்று வகைதேடினார்கள். அப்பொழுது பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்தென்னும் மறுபேர்கொண்ட யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான். அவன் பிரதான ஆசாரியர்களிடத்திலும் சேனைத்தலைவர்களிடத்திலும் போய், அவரைக் காட்டிக்கொடுக்கும் வகையைக் குறித்து அவர்களோடே ஆலோசனை பண்ணினான்." (லூக் 22:2-4)** வசனங்களில் நாம் காணும் பொழுது தெளிவாக யூதாஸுக்குள் சாத்தான் புகுந்தான் என்று வேத வசனம் கூறுகிறது. இங்கு நாம் கவனிக்க வேண்டிய சத்தியம், மகதலேனா மரியாளுகுள்ளும் 7 பிசாசுகள் இருந்தது, ஆனால் அவளோ விடுதலை பெற்றாள். ஆனால் சாத்தான் ஒரு நொடிப்பொழுது யூதாஸ் காரியோத்தை தூண்டி, அவனில் புகுந்த பொழுது அவன் கேட்டின் மகனாய் மாறிப்போனான். ஆண்டவரை மறுதலித்த பேதுரு மனம் கசந்து அழுது ஆண்டவரோடு ஒப்புரவானது போல், யூதாஸால் செய்ய முடியவில்லை. குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் பாவம் செய்தேன் என்று அறிக்கையிட்டு வெள்ளிக்காசை தேவாலயத்தில் எறிந்துவிட்டு நான்டு கொண்டு சாகத்தான் முடிந்தது **(மத் 27:3-5)**. இங்கு மகதலேனா மரியாள் பெற்ற விடுதலையை ஏன் யூதாஸால் பெற முடியவில்லை. காரணம் அவன் காசை விட்டெறிந்தானே ஒழிய, பிசாசின் பிடியில் இருந்து அவனால் வெளிவர முடியவில்லை. உன் பாவத்திற்கு உன் மரணம் தான் சம்பளம் என்று கூறிய பிசாசின் சத்தத்திற்கு அவன் செவி கொடுத்தான்.

இங்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டிய சத்தியம், மகதலேனா மரியாளும், இன்னும் பலரும் பிசாசினால் பிடிக்கப்பட்டு இருந்தபோது, அவர்கள் தங்கள் சுயநினைவை இழந்தவர்களாக இருந்தனர். எனவே ஆண்டவரால் அவர்கள் விடுதலை பெற்ற பொழுது புத்தி தெளிந்து சுயநினைவையோடு, ஆண்டவரை பின்பற்றினர். எனவே ஏதோ ஒரு விதத்தில் சத்துருவினால் அவர்கள் பிடிக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் அதை சுயநினைவோடு அறிந்திருக்கவில்லை. ஆனால் யூதாஸின் காரியத்தலோ அவன் மனம் அறிய, பொருளாசையினால் பீடிக்கப்பட்டு தான் என்ன செய்கிறோம் என்பதை உணர்ந்தவனாய் பிசாசுக்கு இடம் கொடுத்தான். இதுவே நாம் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான சத்தியமாகும். அதாவது எப்பேர்பட்ட லேகியோனாகிய பிசாசுகள் பிடித்தவனை கூட ஆண்டவரால் ஒரு நொடிப்பொழுதில் விடுவிக்க முடியும். ஆனால் ஆண்டவர் நமக்கு தந்திருக்கும் சுய சித்தத்தால், அன்று ஆதாம் ஏவாள் பிசாசின் சத்தத்திற்கு செவி கொடுத்து பாவம் செய்ததைப் போல், மனம் அறிய சத்துருவுக்கு ஒருவன் இடம் கொடுப்பானானால் அது அவனை நான்று கொண்டு சாகும் நிலைக்கு தான் கொண்டு செல்லும்.

பழைய ஏற்பாட்டிலும் சவுல் ராஜாவும் மனம் அறிய தன் ராஜ்யத்திற்கு நன்மை செய்த தாவீதை, பொறாமையினால் பகைத்ததினால் பிசாசினால் பிடிக்கப்பட்டு, இறுதியில் யூதாஸிற்கு ஏற்பட்ட நிலையே அவனுக்கும் நேரிட்டது. எனவே சில நேரங்களில் யோபுவின் வாழ்க்கையில், பொல்லாப்பைக் கொண்டு வந்த சத்துருவாகிய பிசாசானவன், நம் வாழ்க்கையிலும் கிரியைச் செய்ய முடியும். சில கொடிய

சூழ்நிலைகள், வியாதி வேதனைகள், பொல்லாத மனிதர்களின் கிரியைகள், சில இழப்புகள் ஆகியவற்றை நாம் காணும்பொழுது நம் ஆவி ஆத்மா சரீரம் ஆகிய மூன்றிலும் சத்துருவின் போராட்டத்தை உணரலாம். ஆனால் எப்பேர்ப்பட்ட கொடிய சூழ்நிலையாக இருந்தாலும், யோபுவை விடுவித்த ஆண்டவர், மகதலேனா மரியாளை விடுவித்த ஆண்டவர், நம்மையும் பிசாசின் பிடியிலிருந்து விடுவிப்பார். ஆனால் ஒன்றை நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும், நாமாக சத்துரு நம் வாழ்க்கையில் கிரியை செய்வதற்கு இடம் தரக்கூடாது. எனவே பிசாசின் பிடியில் நாம் சிக்கி தவிக்கும் பொழுது, நாமாக அவனுக்கு இடம் கொடுத்திருக்கிறோமா என்பதை ஆராய்ந்து பார்த்து மனம் திரும்ப வேண்டும். அப்பொழுது பேதுருவைப் போல் நாம் மன்னிப்பையும், விடுதலையையும் பெற்றுக் கொள்ளலாம்.

ஒருவேளை புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலராகிய பவுலை போல், பிசாசின் போராட்டங்களை நேரடியாக சந்திக்க நேர்ந்து, அதனால் நம் ஆவி ஆத்மா சரீரத்தில் வேதனை அனுபவித்தால், நாம் கவலை கொள்ள தேவையில்லை. ஆண்டவர் நிச்சயமாக நொடி பொழுதில் அவற்றை நம் வாழ்வில் இருந்து விலக்கி மகதலேனா மரியாளை போல், நம்மையும் வாழ செய்வார். எனவே பிசாசின் கிரியைகளுக்கு நாம் நம் வாழ்வில் மனமறிய இடம் கொடுக்கும் பொழுது, அவற்றால் நம்மை வீழ்த்த முடியுமே தவிர, எப்படிப்பட்ட பொல்லாத பிசாசின் பிடியிலிருந்தும் ஆண்டவர் நம் ஆவி ஆத்மா சரீரம் முழுவதையும் மீட்டுக்கொண்டு, நம்மை நித்திய ஜீவ கரையில் சேர்க்க முடியும். எனவே நம் இருதய சிந்தனைகளை, மாம்ச இச்சைகளை கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிய சிறைப்படுத்துகிறவர்களாய் இருந்து, ஆண்டவரோடு விடுதலையான ஒரு வாழ்வை, இம்மையிலும் மறுமையிலும் வாழ்வோமாக, ஆமென், அல்லேலூயா.